

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை மின் கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பி.மணிமாறன், தொடர்ந்து ஐந்தாவது ஆண்டில் அப்பொறுப்பில் நீடிப்பதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



நாகை மாவட்டம் நாகை நகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளியில் நடைபெற்ற நாகை மாவட்டத்தில் 11ம் வகுப்பு படிக்கும் மாணவ, மணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உ டன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், சட்ட மன்ற உறுப்பினர்கள், முகமதுஷநவாஸ், நாகைமாலி, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், நாகை நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, துணைத்தலைவர் எம்.ஆர்.செந்தில்குமார், ஒன்றியக் குழு தலைவர் அனுசியா மற்றும் பலர் உள்ளனர்.

# தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் 90 பேருக்கு பட்டா!

## அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்!

தூத்துக்குடி, ஜூலை 26 -

தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் குடியிருந்து வருபவர்களிடம் கடந்த 18ம் தேதி வடக்கு மண்டல அலுவலகத்தில் அமைச்சர் கீதாஜீவன் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். அதில் 325 மனுக்கள் பெறப்பட்டன. கோமதி பாய் காலணி, சக்திவிநாயகபுரம், ஸ்டேட்பாங்க காலணி, நடராஜபுரம், ஆகிய பகுதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருபவர்களுக்கு டூவிபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன் 90 பயனாளி களுக்கு பட்டாக்கள் வழங்கி செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது:

“90 பேருக்கு இன்றயை தினம் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதி உள்ளவர்களுக்கு அவர்களது வீடுகளுக்கே சென்று கள ஆய்வு செய்து வருவாய் துறை அதிகாரிகள் பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பார்கள். இதே போல் நகரில் பிற பகுதிகளில் மக்கள் பட்டா பெறாமல் இருந்தாலும் முதலமைச்சர் முக.ஸ்டாலின் தனி கவனத்திற்கு கொண்டு சென்று அவர்களுக்கும் பட்டா வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் சென்னையை சுற்றியுள்ள பகுதியில் பட்டா வழங்கியுள்ளார்கள். கணினி பட்டா இல்லாத மக்கள் நம்முடைய பகுதியிலும் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம் என்றும். மகளிர் உரிமைத் தொகை விடுபட்டவர்களுக்கு கள ஆய்வு செய்து திரும்ப வழங்க கனிமொழி எம்.பி. ஏற்பாடு செய்துவருகிறார். மேலும் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள விளையாட்டு அரங்கை சீரமைத்து பராமரித்து நல்ல முறையில் வீரர்கள் பயன்படுத்தும் வகைக்கு விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் சிறப்பு நிதி ஒதுக்கியுள்ளார். 4ம்இரயில்கேட் பகுதியில் மேம்பாலம் அமைப்பதற்கு நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சருக்கு கோரிக்கை வைத்துள்ளோம் அதில் அமைப்பதற்காக வழிகள் உள்ளது என்று பதில் தந்துள்ளார்கள். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விரைவில் 4ம் கேட் மேம் பாலம் அமைத்து தருவதாக கூறியுள்ளார்” என்று அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் பிரபு, தாசில்தார் பிரபாகரன், மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர்கள் ரவீந்திரன், ஜெயக்குமார், ராமகிருஷ்ணன், மாநகராட்சி மண்டல தலைவர் வக்கீல் பாலகுருசாமி, கவுன்சிலர்கள் தெய்வேந்திரன், அதிஷ்ட மணி, கண்ணன், சரவணக்குமார், கற்பககனி, பொதுக்குழு உறுப்பினர் கஸ்தூரி தங்கம், பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில் குமார், வட்டச் செயலாளர்கள் செந்தில்குமார், குட்டி, சந்தனமாரிமுத்து, கருப்பசாமி, மாவட்ட மருத்துவரணி தலைவர் அருண்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அபிராமிநாதன், துணை அமைப்பாளர் பிரபு, மாநகர இளைஞரணி அமைப்பாளர் அருண் சுந்தர், துணை அமைப்பாளர் ரவி, மாநகர கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் அற்புதராஜ், மாநகர வக்கீல் அணி தலைவர் நாகராஜன்பாபு, பகுதி பிரதிநிதி பேச்சிமுத்து, வட்டப் பிரதிநிதி பாஸ்கர், மணி, அல்பட், கணேசன், மாரிமுத்து, காங்கிரஸ் மண்டலத்தலைவர் சேகர், உள்பட அரசுத்துறை அலுவலர்கள் பயனாளிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலப்பாளையத்தில் புதிய டிரான்ஸ்பார்மர் சேவை - மீனாட்சி புரத்தில் அங்கன் வாடி மையம் - நெல்லை

# பெருமாள் புரத்தில் புதிய சுகாதார வளாகக் கட்டிடம்!

## மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்!

நெல்லை, ஜூலை 26 -

நெல்லை பெருமாள்புரத்தில் புதிய சுகாதார வளாகக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா மற்றும் மேலப்பாளையம் மண்டலம் மேலப்பாளையத்தில் புதிய டிரான்ஸ்பார்ம் சேவை,பாளை மண்டலம் மனகாவலம்பிள்ளை நகரில் நியாய விலைக்கடை, தச்சை மண்டலம்

மீனாட்சிபுரத்தில் அங்கன்வாடி மையம் ஆகியவற்றை மக்கள் பயன்பாட்டிற்காக பாளை சட்டப் பேரவை உறுப்பினர் மு.அப்துல்வகாப் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பாளை சட்டப்பேரவை உறுப்பினர் மு.அப்துல்வகாப் பொதுமக்களின் தேவைகளை அறிந்தும்,கேட்டும் அடிப்படை வசதிகளை தொடர்ந்து மக்களுக்கு அர்ப்பணித்து வருகிறார்.

அதன்படி நெல்லை மாநகராட்சி பாளையங் கோட்டை மண்டலம் 7 வது வார்டு மனகாவலம் பிள்ளை நகரில் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 12 லட்சம் மதிப்பில் நியாயவிலைக்கடைக்கு அடிக்கல் நாட்டியும், தச்சை மண்டலம் 29 வது வார்டு மீனாட்சிபுரத்தில் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 13 லட்சம் மதிப்பில் புதிய அங்கன் வாடி மைய கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டியும்,

மேலப்பாளையம் மண்டலம் 42 வது வார்டு பெருமாள்புரம், காமராஜர் சாலை பூங்காவில் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று பொதுக் கழிப்பறை கட்ட அடிக்கல் நாட்டினார்.

அதன் பின்னர் மேலப் பாளையம் 1 பிரிவிற்கு உட்பட்ட காஜா நாயகம் தெருவில் அதிக மின்பளு காரணமாக பழைய டிரான்ஸ்பார்மருக்கு பதிலாக 63 கிலோவாட் திறன் கொண்ட புதிய டிரான்ஸ்பார்மர் ரூபாய் 8,33,640 மதிப்பில் தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம் மூலம் அமைக்கப்பட்டது.

இதன் மூலம் சீரான மின்சாரம் விநியோகம் கிடைக்கும். அதன் அடிப்படையில் புதிய டிரான்ஸ் பார்ம் சேவையை மக்கள் பயன்பாட்டிற்காக மாநகராட்சி மேயர் (பொறுப்பு) கே.ஆர்.ராஜு முன்னிலையில் மு.அப்து ல்வகாப் எம்.எல்.ஏ.துவக்கி வைத்தார்.

மேலும் “உங்கள் தொகுதியில் முதல்வர்” திட்டத்தின் கீழ் நெல்லை மாநகராட்சியில் அனைத்து பகுதிகளிலும் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிகழ்வுகளில் மாநகராட்சி மேயர் (பொறுப்பு) ராஜு மண்டல தலைவர்கள் பிரான்சிஸ் (பாளை) கதிஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்) மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல், மாமன்ற உறுப்பினர்கள் கந்தன், ஷபி அமீர்பாத்து, டாக்டர் சங்கர், பொன். மாணிக்கம் ஜான், மாநகராட்சி வரிவிதிப்பு குழு தலைவர், மாநகர துணைச் செயலாளர் சுதா மூர்த்தி, வட்டக் கழகச் செயலாளர் தென்கரை முத்து, சிவசுப்பு, உஸ்மான், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் காசி மணி, பொறியாளர் அணி சாய்பாபா, கால்வாய் துரை பாண்டியன், சாமுவேல், சதீஷ், சுடலைக்கண்ணு, மின்வாரிய உதவி மின் பொறியாளர்கள் ரத்னவேணி, கார்த்திக் குமார் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், மிட்டூர் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெறும் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் தலைமையில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தொடங்கி வைத்து, நலதிட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் ஆலங்காயம் ஒன்றியக்குழுத் தலைவர் சங்கிதாபாரி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், மாவட்ட பிரதிநிதி சி.வெங்கடேசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.எஸ்.கார்த்திக், ஊராட்சிமன்ற தலைவர் சி.பிரபாகரன், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் திருநாவுக்கரசு மற்றும் ஊராட்சிமன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பெரும் மழை காரணமாக - நீலகிரி மாவட்டத்தில்

# மீட்பு - நிவாரண நடவடிக்கைகள் குறித்து ஆய்வு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் - ஆ.ராசா எம்.பி. அதிகாரிகளுடன் பங்கேற்பு!

நீலகிரி, ஜூலை.26-

நீலகிரி மாவட்டத்தில், சுற்றுலாத்துறை கா.ராமச்சந்திரன் , நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ இராசா ஆகியோர் தலைமையில், தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் அரசுத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம், உதகை, தமிழ்நாடு அரசு விருந்தினர் மாளிகையில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் தலைமையில், தென் மேற்கு பருவமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் அரசுத்துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் 23.07.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் நீலகிரி மாவட்டத்தில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை தொடர்ந்து கண்காணித்து, பல்வேறு உத்தரவுகளை வழங்கியுள்ளார்கள். அந்தவகையில் கடந்த சில நாட்களாக மாவட்டத்தில் பெய்த கனமழை மற்றும் காற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மழை மற்றும் காற்றினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக கள ஆய்வு செய்து அரசுக்கு ஆய்வறிக்கை, மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் அனுப்பி வைக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற இயற்றை இடர்பாடுகள் ஏற்படும்போது, அனைத்துத்துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருந்து மீட்புபணிகளை உடனடியாக மேற்கொண்டு, பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வண்ணம் பணியாற்ற வேண்டும். மேலும், அனைத்துத்துறை அலுவலர்களும் இதுபோன்ற பேரிடர் காலங்களில் ஒருங்கிணைந்து தங்களது பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் மழையின் காரணமாக பாதிப்புகள் ஏற்பட்டுள்ள கோக்கால், குட்டிமணி நகர், இத்தலார், போர்த்தியாடா, மொட்டோரை ஆகிய பகுதிகள் நேரில் பார்வையிட்டு, எடுக்கப் பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து துறை அலுவலர்களுடன் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழையால் கிட்டத்தட்ட 101 வீடுகள் சேதமடைந்துள்ளது. சேதமடைந்த வீட்டிற்கு தலா ரூ.8,000/- வீதம் இதுவரை மொத்தம் ரூ.8.08 இலட்சம் அரசின் சார்பில் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பயிர்சேதங்கள், தடுப்புச்சுவர் சேதங்கள் உள்ளிட்டவை குறித்தும் கணக்கெடுக்கப்பட்டு, உரிய நிவாரண பெற அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா தெரிவித்ததாவது :

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து, சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து கடந்த 2, 3 நாட்களாக பல்வேறு இடங்களில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த பேரிடர் காலத்தில், எந்த நேரத்திலும் களத்தில் தயார் நிலையில் இருந்து பணியாற்றிய அனைத்து அரசுத்துறை அலுவலர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய இந்த ஆக்கபூர்வமான பணிகளால் நீலகிரி மாவட்ட மக்கள் பயன் பெறுவார்கள் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும், நானும் இணைந்து நீலகிரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் ஏற்பட்டுள்ள சேதங்களை களஆய்வு மேற்கொண்டோம். இந்த கனமழை மற்றும் காற்றினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்தும், அதற்கு வழங்க வேண்டிய இழப்பீடுகள் தொடர்பாகவும், பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாகவும் கணக்கீடு மேற்கொள்வதற்காக இந்த ஆய்வுக் கூட்டம் இன்று மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை அலுவலர்களுடன் நடைபெற்றது.

தற்போது பெய்த தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட அதிகளவில் பெய்த போதிலும் சேதங்கள் குறைவாக இருந்ததற்கு ஒரே காரணம் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்தான்.

இருந்தபோதிலும் 01.06.2024 முதல் 22.07.2024 வரை பெய்த மழை மற்றும் காற்றின் காரணமாக மாவட்டத்தில் 97 வீடுகள் பகுதி சேதமும், 4 வீடுகள் முழுமையான சேதமும் அடைந்துள்ளது.

அதேபோல், 32 இடங்களில் மண்சரிவும், 140 மரங்கள் விழுந்தும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இவை உடனடியாக அப்புறப்படுத்தி, பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் சரி செய்யப்பட்டுள்ளது. தடுப்புச்சுவர் சுமார் 8 இடத்தில் விழுந்துள்ளது. அவற்றை சரி செய்ய உரிய நிவாரணம் கோரப்படவுள்ளது.

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கோவை மாநகர் மாவட்டத்தில்

# கழகத்தினருக்கு புதிய உறுப்பினர் கார்டுகள்!

## நா.கார்த்திக் வழங்கினார்!

கோவை, ஜூலை 26 -

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் நூற்றாண்டு, மற்றும் கழகத்தின் பவளவிழா ஆண்டை முன்னிட்டு, புதிய கழக உறுப்பினர் படிவத்தை பூர்த்தி செய்து தலைமைக்குக் கொடுத்தவர்களுக்கு,

தலைமை கழகத்தால் வழங்கப்பட்ட கழக உறுப்பினர் கார்டுகளை கோவை மாநகர் மாவட்ட தி.மு.க., வடவள்ளி பகுதி தி.மு.க. செயலாளர் வ.ம.சண்முக சுந்தரம் முன்னிலையில், வார்டு எண்கள் : 36,37,38,39,40 வட்டக்கழகச் செயலாளர்கள் விஸ்வநாதன், கா. வேலுச்சாமி, தெய்வம் மகாலட்சுமி, பாலகிருஷ்ணன், கதிரேசன் ஆகியோரிடம் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் வழங்கினார்.

இந்நிகழ்வில், பொதுக் குழு உறுப்பினர் சரஸ்வதி புஷ்பராஜ், மாநகராட்சி மேற்கு மண்டல தலைவர் தெய்வயானை தமிழ் மறை, மாநகர் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் நெசவாளர் அணி அமைப்பாளர் வி.மணி, இலக்கிய அணி அமைப்பாளர் ராஜ்குமார், முரசொலி வெங்கடகிரி, மருதமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் மருதமலை மகேஷ்குமார், சின்னதங்கம், பகுதிக்கழக, வட்டக்கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள்,கழக செயல்வீரர்கள், BLA2 பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**உடுமலை நாராயணன்**

**ஜூலை 26 (1971)**



கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும், பொள்ளாச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

கொங்கு நாட்டில் கழகத்தை கட்டி வளர்த்த சிறந்த செயல்வீரர். உடுமலை தேசிங்கு என்று நண்பர்களால் புகழ்ச்சியாக அழைக்கப்பட்ட முன்னணித் தோழரும் – கழகம் துவங்கிய காலம் முதல் கோவை மாவட்டக் கழக நிர்வாகத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவரும் கழகத் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் விளங்கியவர்.

“1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கோவை மாவட்டத்தை கழகத்தின் கோட்டையாக்கிய பெருமைக்குரியவர்” என தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**